கவனிக்க.- 2009.04.03 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1597 - 2009 අප්‍රේල් මස 08 වැනි බදාදා - 2009.04.08

1597 ஆம் இலக்கம் - 2009 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 08 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி I : தொகுதி (I) - பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)

	பக்கம்
சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்	-
சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்	500
அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும்	-
அரசாங்க ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும்	-
நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும்	-
மற்றைய நியமனங்களும் பிறவும்	-
பதிவாளர் நியமனங்களும் பிறவும்	-
அரசாங்க அறிவித்தல்கள்	501
விலைக் கட்டளைகள்	-
இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்	-
இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள்	-
வரவு செலவுத் திரட்டுக்கள்	-
அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்	505
மாலுமிகளுக்கு அறிவித்தல்கள்	-
மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்	-

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை - நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கான விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2009, ஏப்பிறல் மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2009, ஏப்பிறல் மாதம் 03 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

லக்ஷ்மன் குணவர்தன,
அரசாங்க அமுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2009 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

2009 இன் இல. 119

டீஆர்எவ்/21/ஆர்ஈசீரீ/2697.

இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி நிரந்தரமாக்குதல், இளைப்பாறுதல்

பதவி நிரந்தரமாக்குதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2008, ஏப்பிறல் மாதம் 29 ஆந் திகதியிலிருந்து மேஜர் பதவியில் நிரந்தரமாக்குதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

கப்ரின் (தற்காலிக மேஜர்) அசோக்க மல்லவஆரச்சி, இஇசேப (உ/60604)

இளைப்பாறுதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2008, ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படை நிரந்தரப் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப் பட்டுள்ளது :-

மேஜர் அசோக்க மல்லவஆரச்சி, இஇசேப (உ/60604)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2008.05.23.

4-229

2009 இன் இல. 120

டிஐஆர்எப்/ஆர்ஈசீரீ/234/ஏவை.

இலங்கை தரைப்படை - நிரந்தர படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பெற்ற அதிகாரவாணைக்கு நியமனம் செய்தல்

பின்வரும் பெயருடைய கெடெற் உத்தியோகத்தர்கள் 2008.12.20 ஆந் திகதி முதல் பின்வரும் அட்டவணையின் பிரகாரம் இலங்கை தரைப்படையின் நிரந்தரப் படையில் இரண்டாம் லெப்டினன்ட் வரிசைப் பதவியில் அதிகாரவாணைக்கு நியமனம் செய்தலும் அத்திகதி முதல் அவரவர் பெயர்களின் முன்னே குறிப்பிட்டிருக்கும் அணிகளுக்கும்/ சிறப்பணிகளுக்கும் உள்ளடக்குதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்கள் களிகூர்ந்துள்ளார்கள் :

சி/56820 கெடெற் உத்தியோகத்தர் படவல பத்தினி கெதர சந்துன் ரங்கன படவல, இலங்கை பீரங்கிப் படை
சி/ 56817 கெடெற் உத்தியோகத்தர் போபெத்தே கெதர சமீர பிரியங்கர சமரசிங்க, கெமுனு காவற்படை
சி/ 56816 கெடெற் உத்தியோகத்தர் காலிங்க செனவிரத்ன பண்டாரநாயக முதியன்சே ராலஹாமிலாகே லேனாவல வலவ்வே சஞ்ஜய பண்டார லேனாவல, இலங்கை இலேசாயுத காலாட்படை
சி/ 56802 கெடெற் உத்தியோகத்தர் பிரசாத் மதுசாந்த வன்னிஆரச்சி, விஜயபாகு காலாட்படை
சி/56808 கெடெற் உத்தியோகத்தர் நிஸ்ஸங்க முதியான்சேலாகே அரவிந்த பண்டார நிஸ்ஸங்க, கெமுனு காவற்படை
சி/56812 கெடெற் உத்தியோகத்தர் பொடிமரக்கல விதானலாகே தரிந்து மதுரங்க பெரேரா, இலங்கை சிங்க அணி
சி/56818 கெடெற் உத்தியோகத்தர் மல்கஹகமகே கிஹான் சனத் குமார, கஜபா அணி
சி/56793 கெடெற் உத்தியோகத்தர் பல்லியகுருகே பிரநித் மதுசங்க பல்லியகுரு, இலங்கை சைகைச் சிறப்பணி
சி/56799 கெடெற் உத்தியோகத்தர் அமுனே கெதர அமில ருவன், கஜபா அணி
சி/56805 கெடெற் உத்தியோகத்தர் அமரசேகர கங்கானம்கே திதுல ரங்கண அமரசேகர, இலங்கை இலேசாயுத காலாட்படை
சி/ 56821 கெடெற் உத்தியோகத்தர் கம்மல்பிட்டிய ஆசாரிகே கௌபிக தனஞ்ஜய கம்மலபிடிய, இலங்கை படைக்கலச் சிறப்பணி
சி/ 56813 கெடெற் உத்தியோகத்தர் தசநாயக முதியான்சேலாகே தினுச புத்திக சம்பத் தசநாயக, இலங்கை இலேசாயுத காலாட் படை
சி/ 56819 கெடெற் உத்தியோகத்தர் நாணயக்கார பதிராஜ நளின் மதுசங்க தர்மசேன, இலங்கை சிங்க அணி
சி/ 56792 கெடெற் உத்தியோகத்தர் எரவ்வல லியனகே தொன் றோஷான் எரவ்வல, விஜயபாகு காலாட்படை
சி/56815 கெடெற் உத்தியோகத்தர் வீரகொட ஆரச்சிலாகே கயான் திலங்கா வேரகொட, இலங்கை சிங்க அணி
சி/56790 கெடெற் உத்தியோகத்தர் கருணாநாயக விபுல் பிரியன்த திலகரத்ன, பொறிமுறை காலாட்படை
சி/ 56800 கெடெற் உத்தியோகத்தர் அசரப்புலி தாரக கணேஷ், இலங்கை இலேசாயுத காலாட்படை
சி/ 56806 கெடெற் உத்தியோகத்தர் கஸ்தூரி ஆரச்சிகே கிறிசான்தினிங்க, இலங்கை இலேசாயுத காலாட்படை
சி/ 56782 கெடெற் உத்தியோகத்தர் தமிந்தபண்டார அரம்பகே, இலங்கை படைக்கலச் சிறப்பணி
சி/ 56807 கெடெற் உத்தியோகத்தர் ஹேரத் முதியான்சேலாகே திலின பிரதீப் தரங்க ஹேரத், கெமுனு காவற்படை
சி/ 56804 கெடெற் உத்தியோகத்தர் தசநாயக முதியான்சேலாகே அசேல மதுசங்க பண்டார, இலங்கை எந்திரிகள் அணி
சி/56822 கெடெற் உத்தியோகத்தர் இரத்நாயக முதியான்சேலாகே வசந்த குமார இரத்நாயக, கெமுனு காவற்படை
சி/56809 கெடெற் உத்தியோகத்தர் வீரகோன் முதியான்சேலாகே புத்திம வீரகோன், இலங்கை சிங்க அணி
சி/ 56803 கெடெற் உத்தியோகத்தர் கந்துரு பொக்குண கமகே புத்திக ருவன் பத்மசிறி, கஜபா அணி
சி/56824 கெடெற் உத்தியோகத்தர் பல்லேவத்தே கெதர மஹேஷ் சம்பத் கருணாபால, இலங்கை இலேசாயுத காலாட்படை

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2009.03.17.

4-295

அரசாங்க அறிவித்தல்கள்

யாத்திரைகள் கட்டளைச் சட்டம் (175 ஆம் அத்தியாயம்)

(175 ஆம் அத்தியாயம்) யாத்திரைகள் கட்டளைச் சட்டத்தின் 2ஆம் பிரிவின் கீழ் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

கலாநிதி சரத் அமுனுகம,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
2009.03.14.

ஒழுங்குவிதிகள்

1. இவ் ஒழுங்குவிதிகள் பதிகம தீகவாலுகாராமய ரஜமகா விகாரையின் (வருடாந்த உற்சவ) விதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இவ் ஒழுங்குவிதிகளில் -

''முகாம் இடப்பரப்பு'' என்பது, இவ் ஒழுங்கு விதிகளுக்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட எல்லைகளினுள்ளும் அடங்குகின்ற இடப்பரப்பு எனப் பொருளாகும்;

''அரசாங்க அதிபர்'' என்பது மாத்தறை நிர்வாக மாவட்டத்தின் அரசாங்க அதிபர் எனப் பொருள்படுமென்பதுடன் அவரால் 4 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரையும் உள்ளடக்கும்.

"மருத்துவ அலுவலர்" என்பது முகாம் இடப்பரப்பில் அவருக்குக் குறித்தளிக்கப்பட்ட கடமைகள் பொறுப்பிக்கப்பட்டுள்ள மருத்துவ அலுவலர் எனப் பொருளாகும்;

"யாத்திரிகர்" என்பது, ஏதேனும் நோக்கத்திற்காக முகாம் இடப்பரப்பினுள் பிரவேசித்து அங்கு தங்கியிருக்கும் எவரேனும் ஆள் எனப் பொருளாகும்;

"பொலிஸ் அலுவலர்" என்பது, முகாம் இடப்பரப்பில் அவருக்கு குறித்தளிக்கப்பட்ட கடமைகள் பொறுப்பிக்கப்பட்டுள்ள எவரேனும் கிராம அலுவலரையும் உள்ளடக்கும் ; அத்துடன்

"பொதுச் சுகாதாரப் பரிசோதகர்" என்பது, முகாம் இடப்பரப்பில் அந்தந்தக் கடமைகள் பொறுப்பிக்கப்பட்டுள்ள பொதுச் சுகாதாரப் பரிசோதகர் என்று பொருளாகும்.

3. இவ் ஒழுங்குவிதிகள் மாத்தறை நிர்வாக மாவட்டத்தின் திக்வெல்ல பதிகம தீகவாலுகாராமய ரஜமகா விகாரையின் வெசாக் உற்சவத்திற்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

4. இவ்வொழுங்குவிதிகளின் கீழ் அரசாங்க அதிபருக் குரித்தாக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தைப் பிரயோகிக்கும் படியும், அவருக்குக் குறித்தளிக்கப்பட்ட ஏதேனும் பணியை நிறைவேற்றும் படியும் எவரேனும் பகிரங்க அலுவலருக்கு எழுத்தில் அதிகாரமளிப்பதற்கு அரசாங்க அதிபர் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும்.

05. (1) ஒரு முகாம் இடப்பரப்பிற்கும் அதிலிருந்தும் அல்லது அதனுள்ளும் வாகனப் போக்குவரத்தையும் நடந்து செல்லும் ஆட்களின் நடமாட்டங்களையும் ஒழுங்குபடுத்துவதற்கும் அரசாங்க அதிபர் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) ஓராம் பந்தியின் கீழ் அரசாங்க அதிபருக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிக்கையில் பொலிஸ் அலுவலரொருவருக்கு அவரினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களைப் பின்பற்றி அத்தகைய பொலிஸ் அலுவலரினால் விடுவிக்கப்பட்ட ஏதேனும் சட்ட முறையான கட்டளையை மீறி ஆளெவரும் செயற்படுதலாகாது.

6. ஆளெவரும், அரசாங்க அதிபரின் எழுத்திலான அனுமதியின்றி, எவையேனும் கால்நடைகளை அல்லது வேறேதேனும் விலங்கை முகாம் இடப்பரப்பினுள் கொண்டுவருதலாகாது. ஆயின், எவ்வாறாயினும், ஒரு வண்டியை நிறுத்தி வைப்பதற்கும் மாட்டைக் கட்டிவைப்பதற்குமான நோக்கத்துக்காக முகாம் இடப்பரப்பினுள் 7 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் ஒதுக்கி வைக்கப்பட்டவோர் இடத்துக்கு அவ்வண்டியானது அம்மாட்டினால் இழுத்துச் செல்லப்படுமிடத்து அனுமதி தேவைப்படுதலாகாது.

7. (1) அரசாங்க அதிபர், பின்வரும் நோக்கங்களுக்காக முகாம் இடப்பரப்பினுள் இடங்களை ஒதுக்கி வைப்பதற்கு அல்லது ஏற்பாடு செய்வதற்குத் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) பஸ் வண்டிகளையும் ஏனைய மோட்டார் வாகனங்களையும் நிற்பாட்டி வைத்தல் ;

(ஆ) வண்டிகளை நிறுத்தி வைத்தலும் மாடுகளைக் கட்டி வைத்தலும் ;

(இ) வெவ்வேறு யாத்திரிகர் குழுக்களுக்கு இடவசதியளித்தல் ;

(ஈ) நோய்வாய்ப்படும் அந்த யாத்திரிகர்களைப் பராமரித்தல் ;

(உ) தருமத்தையும் தானத்தையும் பரிந்து கேட்டல் ;

(ஊ) விற்பனைக்காகக் குறித்த சில பொருட்களை வெளிக்காட்டி வைத்தல் ;

(எ) ஏனைய மேன்மையான காரணங்களுக்காகத் தற்காலிகக் குடிசைகளைக் கட்டியமைத்தல் ;

(ஏ) கழுவுவதற்கும் குளிப்பதற்கும் யாத்திரிகர்களால் பயன் படுத்தப்படுவதற்காக வாவிகளைக் கட்டியமைத்தல், கிணறுகளையும் நீர்க்குழிகளையும் தோண்டுதல் மற்றும் ஏனைய வசதிகளை ஏற்பாடு செய்தல் ;

(ஐ) யாத்திரிகளுக்கான குடிநீருக்காகத் தனிவேறான வாவிகளைக் கட்டியமைத்தல், கிணறுகளையும் நீர்க்குழிகளையும் தோண்டுதல் மற்றும் ஏனைய வசதிகளை ஏற்பாடு செய்தல் ;

(ஒ) வேறேதேனும் காரணம்.

(2) அரசாங்க அதிபர் அவசியமானதெனக் கருதுமிடத்து, (1) ஆம் பந்தியிற் குறித்துரைக்கப்பட்டவாறு எந்த நோக்கத்திற்காக இடமொன்று ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளதோ அந்த நோக்கத்தைச் சுட்டிக்காட்டி ஒவ்வோர் இடத்திலும் அறிவித்தலொன்று அல்லது

பெயர்ப்பலகையொனறு வெளிக்காட்டி வைக்கப்படுவதனை அவர் செய்விக்கலாம்.

(3) ஓராம் பந்தியின் கீழான ஒரு நோக்கத்திற்காக அரசாங்க அதிபரினால் இடமொன்று அவ்வாறு ஒதுக்கிவைக்கப்படுமிடத்து அல்லது ஏற்பாடு செய்யப்படுமிடத்து, அத்தகைய இடம் புறநீங்கலாக அத்தகைய நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுதல் வேண்டு மென்பதுடன், முகாம் இடப்பரப்பினுள்ளான வேறெந்த இடமும் அதே நோக்கத்திற்காகப் பயன்படுத்தலுமாகாது.

8. அரசாங்க அதிபர் அல்லது மருத்தவ அலுவலர் நோய்களைத் தடுப்பதற்காக, முகாம் இடப்பரப்பினுள் அமைந்துள்ள ஏதேனும் வாவியில், கிணற்றில், நீர்க்குழியில அல்லது நீர்த்தேக்கத்தினுள் உள்ள நீரினுள் குளோரின் செலுத்துவது, அல்லது ஏதேனும் வாவியை, கிணற்றை, நீர்க்குழியை அல்லது நீர்த்தேக்கத்தை மூடிவிடுவது அவசியமென அவர் கருதினால், அவ்வாறு செய்வதற்குத் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும்.

9. (1) ஆளெவரும், அதற்கென அரசாங்க அதிபரினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமொன்றின் மீது தவிரவும், அத்தகைய அனுமதிப்பத்திரத்தில் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கிணங்கவன்றியும், 7 ஆம் ஒழுங்குவிதியின் கீழான ஒரு நோக்கத்திற்காக ஒதுக்கிவைக்கப்பட்டுள்ள அல்லது ஏற்பாடு செய்யப்பட்டுள்ள முகாம் பிரதேசத்தினுள்ளான ஓரிடத்தில் ஏதேனும் குடிசையை அல்லது தற்காலிகமான அல்லது நிரந்தரமான கட்டமைப்பைக் கட்டுதலாகாது அல்லது ஏலவேயுள்ள ஏதேனும் கட்டிடத்திற்கு ஏதேனும் புதிய சேர்க்கையை நிர்மானித்தலாகாது அல்லது அமைத்தலாகாது.

(2) எவரேனுமாள் ஓராம் பந்திக்கு மீறுதலாக ஏதேனும் குடிசையை அல்லது தற்காலிகமான அல்லது நிரந்தரமான கட்டமைப்பைக் கட்டுமிடத்து அல்லது ஏலவேயுள்ள ஏதேனும் கட்டிடத்திற்கு ஏதேனும் புதிய சேர்க்கையை நிர்மாணிக்குமிடத்து அல்லது அமைக்குமிடத்து, அத்தகைய ஆளுக்கு எழுத்திலான அறிவித்தலொன்றைச் சேர்ப் பிப்பதன்மேல், அவ்வறிவித்தலிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள் அத்தகைய குடிசையை அல்லது கட்டிடத்தை அல்லது கட்டமைப்பை அல்லது ஏதேனும் புதிய சேர்க் கையை விடயத்திற்கேற்ப, அகற்றும்படி அல்லது இடித்தழிக்கும்படி கட்டளையிடுவது அரசாங்க அதிபருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(3) 2 ஆம் பந்தியின் கீழ் அறிவித்தலொன்று சேர்ப்பிக்கப்பட்ட எவரேனுமாள், அதன்கண் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியில் அந்த அறிவித்தலுக்கிணங்கியொழுகுவதற்கு அசட்டை செய்கின்ற விடத்து அல்லது தவறுகின்றவிடத்து அல்லது அத்தகைய அறிவித்தல் எவருக்குச் சேர்ப்பிக்கப்படவேண்டுமென்பதுபற்றி ஐயமொன்று எழுகின்றவிடத்து, அத்தகைய குடிசையை, கட்டமைப்பை அல்லது ஏலவேயுள்ள கட்டிடத்திற்கான புதிய சேர்க்கையை அகற்றுவித்தல் அல்லது இடித்தழிப்பித்தல் அரசாங்க அதிபருக்குச் சட்ட முறையானதாதல் வேண்டும். அந்நோக்கத்திற்காக, அரசாங்க அதிபர், ஆட்களுடனும் சாதனங்களுடனும் எந்திரத்தொகுதியுடனும் ஏதேனும் காணியினுள் அல்லது வளவுகளினுட்பிரவேசித்து, அத்தகைய அகற்றுதலுக்கு அல்லது இடித்தழித்தலுக்கு அவசியமானவாறான அத்தகைய எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தல் அல்லது எடுக்கச் செய்தல் வேண்டும்.

10. ஆளெவரும், யாத்திரிகளின் பயன்பாட்டுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு மலசலகூடத்திற்றவிர, முகாம் இடப்பரப்பினுள் மலம் கழித்தலோ அல்லது சிறுநீர் கழித்தலோ ஆகாது. சைகைப் பலகையொன்றின் மூலம் அத்தகைய இடம் பற்றி அவர்களுக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

11. ஆளெவரும், முகாம் இடப்பரப்பில் அமைந்துள்ள ஏதேனும் வாவியில், கிணற்றில், நீர்க்குழியில், நீர்த்தேக்கத்தில், கால்வாயில் அல்லது அருவியில் உள்ள நீரை அல்லது சிற்றருவி நீரை மாசுபடுத்தலாகாது.

12. அதற்காகக் குறிக்கப்பட்ட ஓரிடத்தில் அல்லது ஏற்பாடு செய்யப்பட்ட கொள்கலனொன்றில் தவிர, ஆளெவரும், முகாம் இடப்பரப்பினுள் ஏதேனும் திரவத்தை அல்லது குப்பைக்கூளத்தைக் கையாண்டு தீர்த்தலாகாது.

13. (1) அரசாங்க அதிபர், முகாம் இடப்பரப்பினுள் யாத்திரிகர்களுக்கான எல்லா உணவுகளினதும் குடிநீர்மங்களினதும் பகிர்ந்தளிப்பை ஒழுங்கு முறைப்படுத்தலாம்.

(2) ஓராம் பந்தியின் கீழ் அரசாங்க அதிபர் தமது தத்துவங்களைப் பிரயோகிக்கையில் அவரின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி ஆக்கப்பட்டனவான ஒரு பொலிஸ் அலுவலரின் அல்லது ஒரு பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் கட்டளைகளை ஆளெவரும் புறக் கணித்தலாகாது.

14. (1) முகாம் இடப்பரப்பில் விற்பனைக்கு வெளிக்காட்டி வைக்கப்பட்ட அல்லது முனையப்பட்ட அல்லது யாத்திரிகர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படவுள்ள ஏதேனும் உணவு அல்லது பானம் மாசுபடுத்தப்பட்டதாக அல்லது மனித பாவனைக்கு உகந்த தல்லாததாகக் காணப்படுமிடத்து, அரசாங்க அதிபர் அல்லது மருத்துவ அலுவலர் அல்லது பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அத்தகைய உணவை அல்லது பானத்தை மனித பாவனைக்கு உகந்ததல்லதென வெளிப்படுத்தலாம்.

(2) ஆளெவரும், முகாம் இடப்பரப்பினுள், (1) ஆம் பந்தியின் கீழ் மனித பாவனைக்கு உகந்ததல்லதென வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் உணவை அல்லது பானத்தை விற்பனை செய்தலோ பகிர்ந்தளித்தலோ ஆகாது

(3) (1) ஆம் பந்தியின் கீழ் மனித பாவனைக்கு உகந்ததல்லதென வெளிப்படுத்தப்படுகின்ற ஏதேனும் உணவின் அல்லது பானத்தின் விற்பனையை அல்லது பகிர்ந்தளிப்பைத் தடைசெய்தலும் அதனை அழித்துவிடுதலும் எவரேனும் பொலிஸ் அலுவலருக்கு அல்லது பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

15. ஆளெவரும், அரசாங்க அதிபரிடமிருந்து உரிமமொன்றைப் பெறாமலும், அத்தகைய உரிமத்தில் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கிணங்கவுமின்றி முகாம் இடப் பரப்பினுள்ளான ஏதேனுமிடத்தில் அல்லது 7 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் முகாம் இடப்பரப்பில் அத்தகைய நோக்கத்திற்காக ஒதுக்கிவைக்கப்பட்ட அல்லது ஏற்பாடு செய்யப்பட்ட ஓரிடத்தில், போறணை, இனிப்புப்பண்டசாலை, இனிப்புப் பண்டத் தயாரிப்பிடம், உணவகம் அல்லது "தண்சல்" ஒன்றை நடத்தலாகாது. ஒவ்வோர் உரிமமும், மருத்துவ அலுவலரின் அல்லது அத்தகைய மருத்துவ அலுவலரினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரின் விதப்புரையின் மீது கட்டணமின்றி வழங்கப்படுதல் வேண்டும்.

16. ஒவ்வோரு போறணையும், இனிப்புப் பண்டசாலையும், இனிப்புப் பண்டத் தயாரிப்பிடமும், உணவகமும் அல்லது "தண்சல்" உம் அதன்கண்ணுள்ள தளபாடங்களும் சாதனங்களும் நன்னிலையிலும் மற்றும் உடனலத்துக் கொத்த நிலைமையிலும் பேணப்படுதல் வேண்டும்.

17. முகாம் இடப்பரப்பில் வெளிக்காட்டி வைக்கப்பட்ட, விற்பனைக்கு முனையப்பட்ட அல்லது பகிர்ந்தளிக்கப்படவுள்ள ஒவ்வொரு கேக்கும், இனிப்புப் பண்டமும், சமைத்த சாப்பாடும், ஒன்றில் ஈக்கள் உட்பிரவேசிப்பதனைத் தடுப்பதற்கு அல்லது மருத்துவ அலுவலரின் அல்லது பொதுச் சுகாதார அலுவலரின் திருப்திக்குத்தகுந்த முறையில் தயாரிக்கப்பட்டவொரு கண்ணாடிப் பெட்டியில் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

18. தேநீர், கோப்பி மற்றும் பால் மண்டிகள், ஏதேனும் உணவின் அல்லது பானத்தின் மீதிகள் மற்றும் சமையலிலிருந்து அல்லது வேறுவகையாகத் தோற்றுவிக்கப்பட்ட கழிவுப்பொருட்கள் என்பன எவையும், முகாம் இடப்பரப்பினுள்ளான ஏதேனுமிடத்தில் திறந்துவைக்கப்படுதலாகாது. அத்தகைய எல்லா அடிமண்டிகளும் கழிவுப்பொருட்களும், 19 ஆம் ஒழுங்கு விதியில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு ஓர் ஏனத்தினுள் இடப்படுதல் வேண்டும். ஏதேனும் அடிமண்டி, கழிவுப் பொருள், குப்பை முகாம் இடப்பரப்பினுள்ளான ஏதேனுமிடத்தின் மீது அல்லது அதற்கண்மையிலுள்ள தரையின் மீது வீசப்பட்டுள்ளதாகக் காணப்படுமிடத்து, அத்தகைய இடத்தின் சொந்தக்காரர் அல்லது பிரதான குடியிருப்பாளர், மற்றும் ஒரு போறணை, இனிப்புப் பண்டச்சாலை, இனிப்புப் பண்டத் தயாரிப்பிடம், உணவகம் அல்லது "தண்சல்" என்பவற்றின் விடயத்தில் அத்தகைய இடத்தின் உரிமம் பெற்றவர், அத்தகைய தவறு புரியப்படுவதனைத் தடுப்பதற்குத் தாம் அவசியமான எல்லா முற்காப்புகளையும் தகுந்த கவனத்தையும் எடுத்துள்ளாரென அத்தகைய சொந்தக்காரர், பிரதான குடியிருப்பாளர் அல்லது உரிமம் பெற்றவர் எண்பித்தாலொழிய, இவ்வொழுங்கு ஏற்பாட்டை மீறியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.

19. ஒவ்வொரு போறணைக்கும், இனிப்புப் பண்டசாலைக்கும், இனிப்புப் பண்டத் தயாரிப்பிடத்திற்கும், உணவகத்திற்கும், "தண்சல்" லுக்கும் வர்த்தக அல்லது தொழில் நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்ட கட்டிடத்திற்கும் அல்லது நிர்மாணிப்புக்கும் தகுந்த மூடி எப்பொழுதும் அதன் மீதுள்ளதும், 112 கன மீற்றர் (4 1/2 கன அடி) கொள்ளளவைக் கொண்டதுமான மரத்திலான, உலோகத்தினாலான அல்லது பிளாத்திக்காலான குப்பை கூளக்கொள்கலன் ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும்.

20 (1) ஒரு போறணை, இனிப்புப் பண்டசாலை, இனிப்புப் பண்டத் தயாரிப்பிடம், உணவகம்," தண்சல்" அல்லது தொழிலிடம், ஒழுங்கு விதிகள் 15, 16, 17, 18 அல்லது 19 என்பவற்றுக்கு மீறுதலாகத் தாபிக்கப்பட்டுள்ளதென அல்லது நடத்தப்பட்டுள்ளதென அரசாங்க அதிபர் கருதுமிடத்து, முகாம் இடப்பரப்பினுள் அமைந்துள்ள அத்தகைய தாபனத்தை அவர் மூடிவிடுதலும், அத்தகைய இடத்திற்காக ஏதேனும் உரிமம் வழங்கப்பட்டிருந்தால் அதனை உடனடியாக இல்லாதாக்குதலும் வேண்டும்.

(2) முகாம் இடப்பரப்பினுள் ஏதேனும் போறணைக்கு, இனிப்புப் பண்டசாலைக்கு, இனிப்புப் பண்டத் தயாரிப்பிடத்திற்கு, அல்லது தொழிலிடத்துக்குப் பொறுப்பாகவுள்ள ஆளொருவரும், (1) ஆம் பந்தியின் கீழ் அரசாங்க அதிபரினால் முடுகை தொடர்பாக வழங்கப்பட்ட சட்டமுறையான பணிப்புரைகளுக்கிணங்க செயலாற்றுதல் வேண்டும்.

21. ஏதேனும் தொற்று அல்லது தொடு நோயினால் பீடிக்கப்பட்டுள்ள ஆளொருவரும் முகாம் இடப்பரப்பினுட் பிரவேசித்தல் ஆகாது.

22. (1) முகாம் இடப்பரப்பில் கொள்ளை நோயொன்று பரவுமிடத்து, அத்தகைய இடப்பரப்பை விட்டுநீங்கும்படி யாத்திரிகளுக்குக் கட்டயிடுதலும். வீட்டு நீங்குவோருக்குமான மார்க்கத்தையும் போக்குவரத்து முறையையும் தீர்மானித்தலும் அரசாங்க அதிபருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) ஆளெவரும், (1) ஆம் பந்தியின் கீழ் அரசாங்க அதிபரினால் ஆக்கப்பட்ட சட்டமுறையான ஏதேனும் கட்டளைக்கெதிராகச் செயலாற்றுதலாகாது.

23. முகாம் இடப்பரப்பினுள் ஏதேனும் தொற்று அல்லது தொடு நோயினால் பீடிக்கப்பட்டுள்ள ஒவ்வோராளும், அந்நோயினால் பீடிக்கப்பட்ட ஆளொருவருடன் அறிந்து கொண்டு வாழ்கின்ற ஆளொருவரும், அத்தகைய நிகழ்வை உடனடியாக மருத்துவ அலுவலருக்கு அல்லது பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு அல்லது எவரேனும் பொலிஸ் அலுவலருக்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

24. முகாம் இடப்பரப்பினுள் ஏதேனும் போறணைக்கு, இனிப்புப் பண்டசாலைக்கு, இனிப்புப் பண்டத் தயாரிப்பிடத்திற்கு, உணவகத்துக்கு, "தண்சல்" லுக்குப் பொறுப்பாகவுள்ள எவரேனுமாள், ஒரு தொற்று அல்லது தொடு நோயினால் பீடிக்கப்பட்டுள்ளவரென அவர் அறிந்துள்ள எவரேனுமாளை அத்தகைய போறணைக்குள், இனிப்புப் பண்டசாலைக்குள், இனிப்புப் பண்டத் தயாரிப்பிடத்திற்குள் உணவகத்தினுள், "தண்சல்" லினுள் பிரவேசிப்பதற்கு, ஏதேனும் பொருளை அல்லது பானத்தைப் பகிர்ந்தளிப்பதில், விற்பனை செய்வதில் அல்லது தயாரிப்பதில் பங்குபற்றுவதற்கு அனுமதித்தலாகாது.

25. ஏதேனும் போறணையின், இனிப்புப் பண்டசாலையின், இனிப்புப் பண்டத் தயாரிப்பிடத்தின், உணவகத்தின், "தண்சல்" லின் உரிமம் பெற்றவரொருவர் அல்லது ஏதேனும் தங்குமிடத்தின் அல்லது யாத்திரிகர் ஓய்விடத்தின் சொந்தக்காரரொருவர் அல்லது பிரதான குடியிருப்பாளரொருவர், தொற்று அல்லது தொடுநோயினால் பீடிக்கப்பட்ட எவரேனுமாளை, எந்நேரத்தில், விடயத்திற்கேற்ப அத்தகைய போறணையில், இனிப்புப் பண்டச்சாலையில், இனிப்புப் பண்டத் தயாரிப்பிடத்தில், உணவகத்தில், தங்குமிடத்தில் அல்லது யாத்திரிகர் ஓய்விடத்தில் தங்கியிருப்பதற்கு அனுமதித்தலாகாது. அத்தகைய நோயினால் பீடிக்கப்பட்ட ஆளொருவர் அத்தகைய இடத்தில் தங்கியிருக்கின்றாரென வெளியாகுமிடத்து உரிமம் பெற்றவர் அல்லது சொந்தக்காரர் அல்லது பிரதான குடியிருப்பாளர், அத்தகைய நிகழ்வை உடனடியாக மருத்துவ அலுவலருக்கு அல்லது பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு அல்லது எவரேனும் பொலிஸ் அலுவலருக்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

26. ஆளெவரும், முகாம் இடப்பரப்பினுள் ஏதேனும் தருமத்தை ஒன்றின் காசாகவோ அல்லது பொருளாகவோ, 7 ஆம் ஒழுங்கு விதியின் கீழ் தானங்களை அல்லது தருமத்தைப் பரிந்து கேட்பதற்கு ஒதுக்கிவைக்கப்பட்ட அல்லது ஏற்பாடு செய்யப்பட்ட அத்தகைய இடத்திற்றவிர, நன்கொடையளித்தலோ அல்லது பகிர்ந்தளித்தலோ ஆகாது.

27. அரசாங்க அதிபரின் எழுத்திலான அனுமதியின்றி, ஆள் எவரும், முகாம் இடப்பரப்பினுள் வாண வெடிகளைக் கொழுத்துதலோ அல்லது ஏதேனும் கூடுபடைக்கலனைப் பயன்படுத்துதலோ ஆகாது.

28. ஒழுங்குவிதி 7 அல்லது 10 இன் கீழ் ஏதேனுமிடத்தில் வெளிக் காட்டிவைக்கப்பட்ட ஏதேனும் அறிவித்தலை அல்லது பெயர்ப் பலகையை ஆளெவரும் தகாத முறையில் மாற்றுதலோ அல்லது அகற்றுதலோ ஆகாது.

29. (அ) இவ் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுள் எவற்றையும் வலியுறுத்தும் நோக்கத்திற்காக முகாம் இடப்பரப்பினுள ஏதேனும் காணியினுள், வளவுகளினுள் அல்லது இடத்தினுள் பிரவேசித்தல்;

(ஆ) 7 ஆவது ஒழுங்குவிதியின் கீழ் ஒரு அறிவித்தலை அல்லது பெயர்ப்பலகையை வெளிக்காட்டி வைக்கும் நோக்கத்துக்காக முகாம் இடப்பரப்பினுள்ளான ஏதேனும் காணியில் அல்லது இடத்தில் கம்பமொன்றை நிர்மாணித்தல் அல்லது நிறுவுதல்.

அரசாங்க அதிபருக்கு, மருத்துவ அலுவலருக்கு, பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு அல்லது எவரேனும் பொலிஸ் அலுவலருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

30.(அ) 6 ஆவது ஒழுங்குவிதியின் கீழ் அல்லது 7 ஆவது ஒழுங்கு விதியின் கீழ் அளிக்கப்பட்ட ஏதேனும் அனுமதியையும் ;

(ஆ) 9 ஆவது ஒழுங்குவிதியின் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் அனுமதிப்பத்திரத்தையும் ;

அத்துடன்

(இ) 15 ஆவது ஒழுங்குவிதியின் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் உரிமத்தையும்.

இல்லாதாக்குதல் தோதானதாகவுள்ளதென அல்லது பொதுமக்கள் நலனுக்கானதாக உள்ளதென அரசாங்க அதிபர் கருதினால், அவற்றை எந்நேரத்திலேனும் இல்லாதாக்குதல் அவருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

அட்டவணை

மாத்தறை நிர்வாக மாவட்டத்தின் திக்வெல்ல பிரதேச செயலாளர் பிரிவின் பதீகம கிழக்கு கிராம அலுவலர் பிரிவின் தீகவாலுகாராமய ரஜமகா விகாரை அமைந்துள்ள பூமி அதற்கான எல்லைகள் பின்வருமாறு எல்லைப்படுத்தப்பட்டுள்ளது:-

வடக்கு : போதிகே வத்த;
கிழக்கு : ஹன்னாசுன்னிகே வத்த;
தெற்கு : சிறிசுல்ல பதும மாவத்தை;
மேற்கு : கெவுல்காஹேனவும் சிறிசங்கதிலகபுரவும்.

4-191

ச. வ. - பீ. 277/40

(188 ஆம் அத்தியாயம்) தொல்பொருட் கட்டளைச் சட்டம்

18 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

(188 ஆம் அத்தியாயமான) தொல்பொருட் கட்டளைச் சட்டத்தின் 18 ஆம் பிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, தேசிய மரபுரிமை அமைச்சர் மஹிந்த யாபா அபேவர்தன ஆகிய நான், இக்கட்டளைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட நினைவுச் சின்னங்களை, மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்கு ''பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்களாக'' இக்கட்டளையின் மூலம் இத்தால் வெளிப்படுத்து கின்றேன்.

இக்கட்டளைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட நினைவுச் சின்னங்கள் தொடர்பில் 19 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல் 2008.12.19 ஆந் திகதிய இலக்கம் 1,581 கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின் பகுதி I: தொகுதி (I) இல் வெளியிடப்பட்டது.

மஹிந்த யாப்பா அபேவர்தன,
தேசிய மரபுரிமை, கலாச்சார அலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
2009.03.12.

அட்டவணை

வெளிப்படுத்தப்படவுள்ள பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்களின் நிரல்

மத்திய மாகாணம்:

1. மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், கங்கவட்ட கோரளை பிரதேச செயலாளர் பிரிவில், கண்டி கிராம உத்தியோகத்தர் பிரிவில், கண்டி நகரில் அமைந்துள்ள பத்தினி தேவாலய கட்டடம்.
2. மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், கங்கவட்ட கோரளை பிரதேச செயலாளர் பிரிவில், கண்டி கிராம உத்தியோகத்தர் பிரிவில், கண்டி நகரில் அமைந்துள்ள நாத தேவாலய கட்டடம்.
3. மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், கங்கவட்ட கோரளை பிரதேச செயலாளர் பிரிவில், கண்டி கிராம உத்தியோகத்தர் பிரிவில், கண்டி நகரில் அமைந்துள்ள ஸ்ரீ விஷ்ணு தேவாலய கட்டடம்.
4. மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், தொளுவ பிரதேச செயலாளர் பிரிவில், 1159 ஆம் இலக்க கனகேகொட கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள கனேகொட ஸ்ரீ கதிர்காம தேவாலய பூமியும், அதில் உள்ள புராதன கட்டடங்களும் மற்றும் தொல்பொருட் சின்னங்களும், வீதியும் சிம்மாசன மண்டபமும்.
5. மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், கங்க இஹல கோரளை பிரதேச செயலாளர் பிரிவில், 1068 ஆம் இலக்க வல்லபகொட கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள வல்லபகொட ஸ்ரீ கதிர்காம தேவாலய பூமியும், அங்குள்ள புராதன கட்டடங்களும், மற்றும் தொல்பொருட் சின்னங்களும்.
6. மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், பாத்தஹேவா ஹெட்ட பிரதேச செயலாளர் பிரிவில், ஹேவாவிஸ்ஸ கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள பஸ்கம ஸ்ரீ நாத தேவாலய பூமியும் அங்குள்ள புராதன கட்டடங்களும், மற்றும் தொல்பொருட் சின்னங்களும் வீதியும், சிம்மாசன மண்டபமும்.
7. மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், அக்குரணை பிரதேச செயலாளர் பிரிவில், அலவத்துகொடை கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள அலவத்துகொடை சமன் தேவாலய பூமியும், அங்குள்ள புராதன கட்டடங்களும், மற்றும் தொல்பொருட் சின்னங்களும்.
8. மத்திய மாகாணத்தில், நுவரெலியா மாவட்டத்தில், பிரதேச செயலாளர் பிரிவில், மாஸ்வெல கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள மொறபே ஸ்ரீ கதிர்காம தேவாலய பூமியும், அங்குள்ள புராதன கட்டடங்களும், மற்றும் தொல்பொருட் சின்னங்களும்.

வடமேல் மாகாணம் :

9. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், இப்பாகமுவ பிரதேச செயலாளர் பிரிவில், 1170 ஆம் இலக்க கிறிதிகல்ல கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள கிறிதிகல்ல வரலாற்றுச் சிறப்புமிக்க ஸ்ரீ விஷ்ணு தேவாலய பூமியும், அங்குள்ள புராதன கட்டடங்களும், மற்றும் தொல்பொருட் சின்னங்களும்.
10. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், பமுணாகொட்டுவ பிரதேச செயலாளர் பிரிவில், பானவ கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள கெர்னவ ஸ்ரீ விஷ்ணு தேவாலய பூமியும், அங்குள்ள புராதன கட்டடங்களும், மற்றும் தொல்பொருட் சின்னங்களும்.
11. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், இப்பாகமுவ பிரதேச செயலாளர் பிரிவில், 571 ஆம் இலக்க ஜங்குரே கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள ஜங்குரே ஸ்ரீ விஷ்ணு தேவாலய பூமியும், அங்குள்ள புராதன கட்டடங்களும், மற்றும் தொல்பொருட் சின்னங்களும்.
12. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், குருநாகல் பிரதேச செயலாளர் பிரிவில், 822 ஆம் இலக்க வில்பாவ கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள வில்பாவ ஸ்ரீ பத்தினி தேவாலய பூமியும், அங்குள்ள புராதன கட்டடங்களும், மற்றும் தொல்பொருட் சின்னங்களும்.
13. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், இப்பாகமுவ பிரதேச செயலாளர் பிரிவில், 504 ஆம் இலக்க கெந்தவல கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள பல்லேகெந்தவல கிராமத்தைச் சேர்ந்த கெந்தவல ஸ்ரீ விஷ்ணு தேவாலய பூமியும், அங்குள்ள புராதன கட்டடங்களும், மற்றும் தொல்பொருட் சின்னங்களும்.

தென் மாகாணம் :

14. தென் மாகாணத்தில் மாத்தறை மாவட்டத்தில், தெவிநுவர பிரதேச செயலாளர் பிரிவில், 433சீ இலக்க தெவிநுவர கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள தெவிநுகர உப்புல்வன் தேவாலய பூமியும், சிம்மாசன தேவாலய பூமியிலுள்ள அங்குள்ள புராதன கட்டடங்களும், மற்றும் தொல்பொருட் சின்னங்களும்.

ஊவா மாகாணம் :

15. ஊவா மாகாணத்தில் மொனறாகலை மாவட்டத்தில், மெதகம பிரதேச செயலாளர் பிரிவில், கொட்டபோவ கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள கொட்டபோவ குடா கதிர்காம தேவாலய பூமியும், அங்குள்ள புராதன கட்டடங்களும், மற்றும் தொல்பொருட் சின்னங்களும்.
16. ஊவா மாகாணத்தில் மொனறாகலை மாவட்டத்தில், கதிர்காம பிரதேச செயலாளர் பிரிவில், கதிர்காம கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள கதிர்காம ருஹுணு மகா கதிர்காம தேவாலய பூமியும், அங்குள்ள புராதன கட்டடங்களும், மற்றும் தொல்பொருட் சின்னங்களும்.
17. ஊவா மாகாணத்தில் மொனறாகலை மாவட்டத்தில், பதுளை பிரதேச செயலாளர் பிரிவில், பதுளை கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த பதுளை நகரில் அமைந்துள்ள ஸ்ரீ பத்தினி தேவாலய பூமியும், அங்குள்ள புராதன கட்டடங்களும், மற்றும் தொல்பொருட் சின்னங்களும் வீதியும், சிம்மாசன மண்டபமும்.

4-202

அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ யின் (பதிவு இல. PQ 118) பணிப்பாளர் சபையால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி பின்வரும் தீர்மானம் வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ யின் (பதிவு இல. PQ 118) பணிப்பாளர் சபையால் 2009, பெப்புருவரி 11 ஆந் திகதி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"புதிய நகர், கொத்தட்டுவ, வெலிக்கடை வீதி, 838/A இலக்கத்தைச் சேர்ந்த வீரசிங்க முதியான்சேலாகே பிரியஞ்சலா கங்காநாத் வீரசிங்க (இதனகத்துப் பின்னர் ஈடுவைத்தவர் எனக் குறிப்பீடு செய்யப்படுவார்) கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு சீ. பி. ரணசிங்க அத்தாட்சிப்படுத்திய 2006, சனவரி 30 ஆந் திகதி கொண்ட 428 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீது (இதனகத்துப் பின்னர் "முறி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இதற்கான அட்டவணையில் நன்கு விவரிக்கப்படும் உரிமைகளையும் ஆதனத்தையும் வளவுகளையும் கொழும்பு 02, யூனியன் பிளேஸ் 242 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த (முன்னர் இல. 76, யோர்க் வீதி, கொழும்பு 01) வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ யின் (முன்னர் வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி என அறியப்பட்டது) சார்பில் மேற்படி ஈடுவைத்தவரால் பெறப்பட்ட நிதி வசதிகளின் மீள் கொடுப்பனவுக்குப் பிணைப்பொறுப்பாக ஈடும் அடைமானமும் வைத்துள்ளார் ஆதலாலும்,

சொல்லப்பட்ட ஈடுவைத்தவர் மேற்படி முறியினால் பெறப்பட்ட கடன்வசதிகளின் கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலால் இப்பொழுது 2008.12.09 ஆந் திகதியன்றுள்ளவாறு பத்து இலட்சத்து அறுபத்து மூவாயிரத்து தொளாயிரத்து பதின்மூன்று ரூபா எழுபத்தைந்து சதம் (ரூ. 10,63,913.75) நேஷன்ஷ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ க்கு வருமதியாகவும் சேரவேண்டியுமுள்ளது.

சொல்லப்பட்ட பத்து இலட்சத்து அறுபத்து மூவாயிரத்து தொளாயிரத்து பதின்மூன்று ரூபா எழுபத்தைந்து சதம் (ரூ. 10,63,913.75) 2008.12.09 ஆந் திகதியன்றுள்ளவாறு வீடமைப்புக் கடன் மீது நிலுவையிலுள்ள முதல் ஒன்பது இலட்சத் எண்பத்தெட்டாயிரத்து இருநூற்று பதினைந்து ரூபா ஐம்பத்தாறு சதத்தின் மீது (ரூ. 9,88,215.56) 2008.12.10 முதல் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு 29 சதவீதப்படி மேலும் வட்டியை யும் சார்புடைய நியதிச்சட்ட விதிப்பனவுகளையும் விளம்பரச் செலவையும் உறப்பட்ட வேறு எவையேனும் அறவீடுகளையும் அதன்பின்னர் கொடுப்பனவுகள் எவையும் (பெறப்பட்டிருப்பின்) அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக இதற்கான அட்டவணையில் நன்கு விவரிக்கப்படும் உரிமைகளும் ஆதனமும் வளவுகளும் திரிவங்க அன்ட் சேனநாயக ஒக்ஷனியர்ஸால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

அட்டவணை

1. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோறளை, பல்லே பற்று, கடுவலை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட ஹோமாகமயில் அமைந்துள்ளதும் வெலிவிட்டவத்த மற்றும் உடுவிலகும்புற என அழைக்கப்படுவதுமான காணியில் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. டீ. ஜீ. வீரசிங்க தயாரித்த 2003, ஏப்பிறல் 20 ஆந் திகதி கொண்ட 2395 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 64 என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும். மேற்படி துண்டு 64 என்பதற்கு எல்லைகளாக – வடக்கில் : துண்டு 65 ; கிழக்கில்: துண்டு 94 ; தெற்கில் : துண்டு 63 ; மேற்கில் : துண்டு 96 என்பன அமைந்தள்ளன. மேற்படி 2395 ஆம் இலக்க வரைபடத்தின்படி இதன் பரப்பளவு எட்டு தசம் சைவர் மூன்று பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 8.03பே.) இது ஹோமாகம காணிப் பதிவகத்தில் G 1434/231 என்பதில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கீழே நன்கு விவரிக்கப்படும் வீதிக்கென ஒதுக்கப்பட்ட காணிகளிலும் அவற்றின் மீதும் அவற்றின் வழியாகவும் வழியுரிமை யுடன் சேர்த்து.

2. மேற்படி ஹோமாகம கிராமத்தில் அமைந்துள்ளதும் வெலிவிட்டவத்த மற்றும் உடுவிலகும்புற என அழைக்கப்படுவதுமான காணியில் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. டீ. ஜீ. வீரசிங்க தயாரித்த 2003, ஏப்பிறல் 20 ஆந் திகதி கொண்ட 2395 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 96 என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும். (வீதிக்கென ஒதுக்கப்பட்டது) மேற்படி துணடு 96 என்பதற்கு எல்லைகளாக – வடக்கில் : துண்டு 91 ; கிழக்கில்: துண்டுகள் 67 முதல் 62 வரை மற்றும் 95, அத்துடன் 61 முதல் 59 வரை ; தெற்கில் : துண்டு 101 ; மேற்கில் : துண்டுகள் 52 முதல் 49 வரை 97 மற்றும் 44 என்பன அமைந்துள்ளன. மேற்படி 2395 ஆம் இலக்க வரைபடத்தின்படி இதன் பரப்பளவு இருபத்து ஒன்று தசம் எட்டு இரண்டு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 21.82பே.) இது ஹோமாகம காணிப் பதிவகத்தில் G 1530/ 55 என்பதில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

3. மேற்படி ஹோமாகம கிராமத்தில் அமைந்துள்ளதும் வெலிவிட்டவத்த மற்றும் உடுவிலகும்புற என அழைக்கப்படுவதுமான காணியில் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. டீ. ஜீ. வீரசிங்க தயாரித்த 2003, ஏப்பிறல் 20 ஆந் திகதி கொண்ட 2395 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 91 என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும். (வீதிக்கென ஒதுக்கப்பட்டது) மேற்படி துண்டு 91 என்பதற்கு எல்லைகளாக – வடக்கில் : துண்டுகள் 107, 22, 108 மற்றும் முன்னர் எச். டீ. யூ. குணசேகரவின் காணி இப்பொழுது பினான்ஸ்வத்த ; கிழக்கில்: வீதி (பி. ச.) ; தெற்கில் : துண்டுகள் 90, 83, 82, 92, 68, 94, 67, 96, 44, 98, 43, 100 மற்றும் 23 ; மேற்கில் : துண்டுகள் 23, 107, 22 மற்றும் 108 என்பன அமைந்துள்ளன. மேற்படி 2395 ஆம் இலக்க வரைபடத்தின்படி இதன் பரப்பளவு பதின்மூன்று தசம் ஆறு சைவர் பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 13.60பே.) இது ஹோமாகம காணிப் பதிவகத்தில் G 1530/54 என்பதில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

தேஜா சில்வா,
கம்பனிச் செயலாளர்.

242, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2.

4-250

மக்கள் வங்கி

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழ் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் 2008.05.30 ஆந் திகதி நடைபெற்ற அதன் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :

''லலித் சமரசிங்க திசாநாயக்க மற்றும் சந்திரா சமரசிங்க திசாநாயக்க மற்றும் ஜயசிங்க முதியான்சலாகே ஞானவதி மற்றும் அதுல சமரசிங்க திசாநாயக்க என்போர், மக்கள் வங்கியின் சார்பில் நுவரெலியாவைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஜயமினி அம்பகஹாவத்த என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2003, நவெம்பர் 12 ஆந் திகதிய 134 ஆம் இலக்க முறியின் மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவில் தவணை தவறியுள்ளனர் ஆதலால், சொல்லப்பட்ட முறியின் மீது ஐந்து இலட்சத்து நாற்பத்தொன்பதாயிரத்து நூற்றெட்டு ரூபா இருபத்தெட்டு சதம் (ரூ. 5,49,108.28) கொண்ட தொகை இப்பொழுது மக்கள் வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியுமுள்ளது. சொல்லப்பட்ட ஐந்து இலட்சத்து நாற்பத்தொன்பதாயிரத்து நூற்றெட்டு ரூபா இருபத்தெட்டு சதம் (ரூ. 5,49,108.28) கொண்ட தொகை மீது 2007.11.23 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு 24.5 வீதப்படியான மேலதிக வட்டியையும், சொல்லப்பட்ட மக்கள் வங்கிச் சட்டத்தின் 29எல் என்னும் பிரிவின்கீழ் அறவிடற்படற்பாலனவான செலவுத் தொகைகளையும் பணங்களையும் அதன் பின்னர் கொடுப்பனவு (ஏதேனும்) பெறப்பட்டிருப்பின் அதனைக் கழித்து அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 134 ஆம் இலக்க ஈட்டுமுறியினால் சொல்லப்பட்ட வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் கொழும்பு 5, ஹெவ்லொக் வீதி, இல. 290 இலுள்ள உத்தரவுபெற்ற ஏலதாரர் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானிக் கின்றது.''

ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

மத்திய மாகாணம், நுவரெலியா மாவட்டத்திலுள்ள நுவரெலியா பிரிவின் திம்புலக் கோறளையில் பியார்வெல் குறூப்பின் பெல்கிரேலியாத் தோட்டத்தின் பாகங்களாக முன்னர் அமைந்ததும், இப்போது தலவாக்கலை–லிந்துல நகரசபைக்குச் சொந்தமானதும், உரிமம்பெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. எம். பெரேரா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1960, யூன் 20 ஆந் திகதிய 213 ஆம் இலக்க வரைபடத்தில் 1 மற்றும் 2 என அடையாளமிடப்பட்ட ஒன்று சேர்க்கப்பட்ட காணித்துண்டுகளின் உட்பிரிவொன்றாக வுள்ளதும், உரிமம்பெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. எம். பெரேரா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1962, யூலை 15 ஆந் திகதிய 467 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 11 என அடையாள மிடப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் 11 என அடையாளமிடப்பட்ட சொல்லப்பட்ட காணித்துண்டம் பின்வரும் எல்லைகளைக் கொண்டுள்ளது– வடக்கில் : காணித்துண்டம் 10 ; கிழக்கில் :

பெல்கிரேவியாத் தோட்டம் ; தெற்கில் : காணித்துண்டம் : 12 ; மற்றும் மேற்கில் : பிரதான வீதி ; பரப்பளவில் இது, அதன் மீதுள்ள கட்டிடங்களுடன் ஐந்து தசம் சைபர் எட்டுப் பேர்ச்சுக்களை (0ஏ. 0றூ. 5.08பே.) கொண்டுள்ளதுடன், பி. நொ. எஸ். எம். ஆர். ராமராஜா என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2000.05.24 ஆந் திகதிய 1067 ஆம் இலக்கக் கொடையுறுதியின் கீழும் அதன் பயனைக் கொண்டும் வைத்திருக்கப்பட்டு உடைமைகொள்ளவும்பட்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்.

மக்கள் வங்கி,
பிரதேசத் தலைமை அலுவலகம்,
இல. 40, பார்க் வீதி,
நுவரெலியா.

நுவரெலியாவைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஜயமினி அம்பகஹாவத்த என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2003, நவெம்பர் 12 ஆந் திகதிய 134 ஆம் இலக்க ஈட்டுமுறியின்படி ஆதனத்தின் விவரணம் சரிபார்க்கப்பட்டுள்ளது.

சட்ட அலுவலர்.

4-263

இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்

கொழும்பு 02, வொக்ஷோல் வீதி, இல. 137 ஐச் சேர்ந்த திருவாளர்கள் சமர்வில் மற்றும் கம்பனி லிமிட்டெட்டின் கடன் பொறுப்புகளுக்காக ஈடுவைக்கப்பட்ட கொழும்பு 02, வொக்ஷோல் வீதி, இல. 137 இல் அமைந்துள்ள ஆதனங்கள்

2008.11.28 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகனமதாகவும் தீர்மானித்ததாவது -

''பிரசித்த நொத்தாரிசு கே. திருவருள்வள்ளல் அத்தாட்சிப்படுத்திய 1980.03.28 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 58, பிரசித்த நொத்தாரிசு கே. நரேந்திரகுமார் அத்தாட்சிப்படுத்திய 1981.07.20 ஆந் திகதியிட்ட ஈட்டு முறி இல. 195, பிரசித்த நொத்தாரிசு கே. நரேந்திரகுமார் அத்தாட்சிப்படுத்திய 1982.09.22 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 275, பிரசித்த நொத்தாரிசு எம். என். ஜயவரத்தன அத்தாட்சிப்படுத்திய 1985.12.11 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 578, பிரசித்த நொத்தாரிசு எம். என். ஜயவர்தன அத்தாட்சிப்படுத்திய 1988.09.01 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 829 பிரசித்த நொத்தாரிசு சி. கே. எஸ். ஐ. பி. ஏ. முதலிகே அத்தாட்சிப்படுத்திய 1991.06.19 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 532, பிரசித்த நொத்தாரிசு எம். டி. பி. எஸ். கருணாநாயக்க அத்தாட்சிப்படுத்திய 1995.07.26 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 61 பிரசித்த நொத்தாரிசு சி. கே. எஸ். ஐ. பி. ஏ. முதலிகே அத்தாட்சிப்படுத்திய 1997.09.03 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 729, பிரசித்த நொத்தாரிசு கே. கே. பி. ஆர். த சில்வா அத்தாட்சிப்படுத்திய 2000.12.22 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 327 ஆகியவற்றின் பேரில் 137, வொக்ஷோல் வீதி, கொழும்பு 2 என்னும் முகவரியைச் சேர்ந்த சமர்வில் அன்ட் கம்பனி லிமிட்டெட்டிடமிருந்து மேலதிகப் பற்று மீது 2008.10.31 வரை முதலும் தீர்க்காதிருக்கும் வட்டியும் எட்டு கோடி தொண்ணூற்று நான்கு இலட்சத்து அறுபத்தெட்டாயிரத்து முந்நூற்று அறுபத்தேழு ரூபா பன்னிரண்டு சதம் (ரூ. 8,94,68,367.12) அத்துடன் ஆறு கோடி ரூபா (ரூ. 6,00,00,000) ஆண்டுக்கு 22.38 வீதத்தில் 2008.11.01 தொடக்கம் மேலும் வட்டியும் கொடுப்பனவுத் திகதி வரை வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

2. மேற்குறிப்பிட்டமுறி இலக்கங்கள் மீது வருமதியாக உள்ள மேற்குறிப்பிட்ட எட்டு கோடி தொண்ணூற்று நான்கு இலட்சத்து அறுபத்தெட்டாயிரத்து முந்நூற்று அறுபத்தேழு ரூபா பன்னிரண்டு சதம் (ரூ. 8,94,68,367.12) அத்துடன் 2008.11.01 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு கோட்டை, பிற்றகோட்டை, இல. 474, மஹானாம ட்ரைவ்வைச் சேர்ந்த அங்கீகரிக்கப்பட்ட முன்னோடி பட்டய ஏலதாரர்களாகிய திருவாளர்கள் ஆர். எஸ். எம். ஏலத்தினருக்கு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 19 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களுக்கமைய இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 21 ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி தொடர்பாடல் முகாமையாளர் (அறவிடல் - தொகுதி) க்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.''

முதலாம் அட்டவணை

